**DEPOSITION OF WITNESS**
**(Chapter XX III Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1**
**RAMANATHAPURAM**
**CASE NO: S.T.C 483/2018**
**Deposition of witness for prosecution-PW-1**

| | | |
|---|---|---|
| Name | : | திரு.தெய்வச்சிலை |
| Father Name | : | திரு.கந்தன் |
| Village | : | பெரியார் நகர் |
| Taluk | : | இராமநாதபுரம் |
| Calling | : | வியாபாரம் |
| Religion | : | இந்து |
| Age | : | 47 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the 02 nd day of November 2019.

முதல் விசாரணை:-

நான் இராமநாதபுரம் பெரியார் நகரில் வசித்து வருகிறேன். நான் இந்த வழக்கின் மனுதாரர் என்னுடைய சத்திய பிரமாண வாக்குமூலத்தினை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். நான் சொல்ல சொல்ல என்னுடைய வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டது. அதனை எனது முதல் விசாரணை வாக்குமூலமாக ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன்.

எனது தரப்பில் குறியீடு செய்ய வேண்டிய ஆவணங்கள்

1. 05.06.2018ம் தேதியிட்டு எதிரி எனக்கு கொடுத்த ரூ.10,00,000/-ற்கான இராமநாதபுரம் தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கியின் காசோலை எண். 012231ன் அசல் ம.சா.ஆ.1.

2. 05.06.2018ம் தேதியிட்டு எதிரி எனக்கு கொடுத்த ரூ.10,00,000/-ற்கான இராமநாதபுரம் கிளை ICICI வங்கியின் காசோலை எண்.217295ன் அசல் ம.சா.ஆ.2.

3. 11.06.2018ம் தேதியிட்டு எதிரியின் கணக்கில் போதிய பணமில்லை என திருப்பப்பட்ட வங்கி குறிப்பாணை ம.சா.ஆ.3

4. 11.06.2018ம் தேதியிட்டு எதிரியின் கணக்கில் போதிய பணமில்லை என திருப்பப்பட்ட வங்கி குறிப்பாணை ம.சா.ஆ.4

5. 21.06.2018ம் தேதியிட்டு நான் எனது வழக்கறிஞர் மூலமாக எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு ம.சா.ஆ.5.

6.22.06.2019ம் தேதியிட்டு மேற்படி அறிவிப்பை எதிரி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை ம.சா.ஆ.6.

எதிரி தன்னுடைய வங்கி கணக்கில் போதிய பணமில்லை என தெரிந்தும் காசோலை அளித்து, என்னிடம் வாங்கிய கடன் பணத்தை திருப்ப தராமல் மோசடி செய்ததால் அவருக்கு தண்டனை வழங்கவும் அபராதமாக எனது தொகையை பெற்றுத்தரவும் இந்த வழக்கை தாக்கல் செய்கிறேன்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-

அவகாசம் கோரப்பட்டது. அளிக்கப்பட்டது.